# அர்ச். அவிலா தெரேசம்மாள் காட்டிய திடம்!

அது 1557ம் ஆண்டு அக்டோபர் மாதத்தின் ஒருநாள். ஸ்பெயின் நாட்டில் அவிலா நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அந்நகரில் அமைந்துள்ள மனிதாவதார மாதா கார்மெல் மடத்தின் தலைவியாக தெரேசம்மாள் பதவியேற்கவிருக்கிறாள். கையில் அழகிய அர்ச்.சூசையப்பரின் சுரூபத்தை ஏந்தியவாறு கார்மெல் சபையின் மாநில அதிபர் சங். ஆஞ்ஞலோ சுவாமியோடு மடத்திற்கு வந்த அவளுக்கு பெரும் ஏமாற்றமே காத்திருந்தது.

கார்மெல் மடங்களைச் சீர்திருத்தி பழைய ஒழுங்கிற்கு கொண்டுவர முயலும் அவளது செயலை வெறுத்த சில கன்னியர்களுக்கு தெரேசா தங்களது மடத்தின் தலைவியாக வருவது பிடிக்கவில்லை. “அவள் இங்கே வந்து தன் போக்குபோல கடும் தபசையும், புதுமுறை ஒழுங்கையும் திணிப்பாள்; நாம் என்ன சீர்கெட்ட அலைகிறோம். அவள் வந்து நம்மை சீர்படுத்த! எல்லாம் ஒழுங்காக இருக்கிறது. இதுவே போதும். ஒருபோதும் அவளை தாயாராக ஏற்கப்போவதில்லை” என்று தங்களுக்குள் கூடிப்பேசி முடிவெடுத்தவர்களாய் தெரேசாள் மடத்துக்குள் நுழையவிடாமல் தடுத்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். சிலர் அவளை சபித்தனர். தெரேசாவை விரும்புகிறவர்களோ சிலுவையைத் தூக்கிக்கொண்டு மகிழ்ச்சியோடு எதிர்கொண்டு வந்து வரவேற்றனர்.

இதற்குள் அங்கே மடத்தின் வாயிலில் பெரும் கூட்டம் கூடிவிட்டது. சாந்தமே உருவாக இருக்க வேண்டிய கன்னியர் இப்படி ஆர்ப்பாட்டம் செய்வதைக் கண்டு மக்கள் வியந்துபோனாலும் அவர்களில் சிலரும் கத்த ஆரம்பிக்கவே நிலைமையைக் கட்டுப்படுத்த நகர காவலர்கள் ஓடோடி வந்தனர். இந்த ஆர்ப்பாட்டங்களையும், எதிர்ப்புகளையும் கண்டு தெரேசம்மாள் ஒருகணம் கலங்கிப் போனாலும் “தனது நேசர் சேசுக்கிறீஸ்து தனக்குப் பணித்த அலுவல் சபையைச் சீர்திருத்துவதே” என்பதில் உறுதியடைந்ததால் அவள் மனம் திடம் பெற்றது. அதோடு தலைவியாக தனது நியமனம் பாப்பரசரின் உத்தரவிலேயே என்பதால் உறுதிகொண்டவள் மெல்ல மடத்தினுள் நுழைந்தாள்.

மடத்தினுள் சென்றதும் மாநில அதிபர் சுவாமி அவளது நியமனத்தை அறிவித்தார். ஆனால், அவரது அறிவிப்பு எதிர்ப்பு சகோதரிகளின் கூக்குரலிலும்,

ஆர்ப்பாட்டத்திலும் கரைந்து போயிற்று. இதற்கிடையில் தெரேசாளை ஆதரிக்கும் கன்னியர்கள் “தெதேயும்” என்ற நன்றிக் கீதத்தைப் பாடி தாயாரை அழைத்துச் செல்ல முயன்றனர். ஆனால் அது முடியாது போகவே திகைத்தனர். மாநில அதிபர், “எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் திருச்சபையின் தண்டனையைப் பெறுவர்” என்று விடுத்த எச்சரிக்கையும் வீணாய்ப் போனது. இதனால் கடுங்கோபம் கொண்ட எதிர்ப்பு சகோதரிகள் இன்னும் ஆவேசத்துடனும் உணர்ச்சிவயப்பட்டு கலகக்குரல் காட்ட சிலர் மயங்கி மூர்ச்சையாகி விழுந்தனர்.

அவர்கள் எதிர்ப்பை கண்டு கலங்காத தெரேசாள் சிற்றாலயம் சென்று சர்வேசுரனை மன்றாடினாள். தம்மை எதிர்க்கும் சகோதரிகளை ஆசீர்வதிக்கும்படியாகவும், தேவ திருவுளத்தை நிறைவேற்ற தமக்கு திடத்தைத் தரும்படியாகவும் நெஞ்சுருக வேண்டினாள். சகோதரிகள் மயங்கி விழுந்தனர் என்பதையறிந்து, உடனே அவர்களிடம் சென்று தாய்க்குரிய அன்போடு தூக்கி அரவணைத்து ஆறுதல் சொல்லி தன் நிலைக்கு வரவழைத்தாள். இதனால் சீற்றம் சற்றுத் தணிந்து அங்கே மவுனம் நிலவ, உடனே மீண்டும் “தெதேயும்” பாடப்பட்டு ஆதரவு கன்னியர் தலைவியின் ஆசனத்தில் அமர்த்தினார்கள். தெரேசாள் மடத்து தலைவியாக பொறுப்பேற்றாள். எதிர்த்த கன்னியர் தோல்வியுற்றனர். ஆனாலும் முதல் கூட்டத்திலேயே அவளைத் தங்களது தாயாராக ஏற்காது கலகம் செய்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டனர்.

மறுநாள் முதல் கூட்டம். அரங்கத்திற்கு வந்த எதிர்ப்பு சகோதரிகள் அனைவரும் திகைத்துப்போயினர். அங்கே பெரிய அறையின் நடுவில் போடப்பட்டிருந்த தலைவிக்குரிய பெரிய ஆசனத்தில் மாதா சுரூபம் வைக்கப்பட்டிருந்தது. அதன் கரத்தில் தாயாரின் பொறுப்பைச் சுட்டிக்காட்டும் திறவுகோல்கள் தொங்கின. மாதா சுரூபத்தின் காலடியில் சிறு முக்காலியில் தாயார் தெரேசம்மாள் அமர்ந்திருந்தாள்! கன்னித்தாயே மடத்தின் தலைவி; தெரேசாள் அவர்களுடைய பணியாள் மட்டுமே என்ற உட்பொருளை உணர்த்திய அக்காட்சியைக் கண்டு வியந்துபோன எதிர்ப்பு சகோதரிகளின் கடினமான உள்ளம் இளகத் தொடங்கியது. தெரேசாளின் நல்லுரையும் அவர்களது உள்ளத்தை உருக்கவே அங்கே! மடத்தில் எதிர்ப்பு மறைந்து பணிவு தோன்றி பரிசுத்தம் துலங்கலாயிற்று.